# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **பெரியபுராணம்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# பெரியபுராணம்

## பெரிய புராணம்

| | |
|---|---|
| ஆசிரியர் | - சேக்கிழார் |
| இயற்பெயர் | - அருண்மொழித்தேவர் |
| ஊர் | - குன்றத்தூர் - காஞ்சிபுரம் |
| காலம் | - 12 ஆம் நூற்றாண்டு |
| இயற்றிய நூல்கள் | - பெரிய புராணம் |
| சிறப்பு பெயர்கள் | - தெய்வச் சேக்கிழார், தொண்டர் சீர் பரவுவார், உத்தம சோழ பல்லவராயன் |
| நூலின் சிறப்பு பெயர்கள் | - திருத்தொண்டர்புராணம், திருத்தொண்டர் மாக்கதை |
| திருமுறை | - 12 ஆம் திருமுறை |

**சிறப்புகள்:**

- பெரியபுராணம் 2 காண்டங்களையும், 13 சருக்கங்களையும், 4286 பாடல்களையும் கொண்டது.
- பெரிய புராணத்தின் முதல் சருக்கம் திருமலைச் சறுக்கம், இறுதிச் சறுக்கம் வெள்ளை யானைச் சறுக்கம்.
- அநபாயச்சோழனிடம் தலைமை அமைச்சராக இருந்தவர் சேக்கிழார்.
- சேக்கிழார் உத்தம சோழபல்லவர் என்ற பட்டம் பெற்றவர்.
- தமிழில் தோன்றிய இரண்டாவது தேசிய காப்பியம் - பெரிய புராணம்.
- முதல் தேசியக் காப்பியம் என்பது சிலப்பதிகாரம்.
- பெரியபுராணத்திற்கு சேக்கிழார் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம்.
- சொற்கோயில் எழுப்பிய இவர் கற்கோயிலும் எழுப்பியுள்ளார்.
- சேக்கிழாரின் பாடல்கள் தெய்வமணம் கமழும் தன்மையுடையவை.
- தனியடியார்கள் 63, தொகையடியார்கள் 9 பேர் முதலிய 72 சிவனடியார்களின் வரலாற்றை கூறுவதனால் பெருமை பெற்ற புராணம் - பெரிய புராணம்.
- 63 நாயன்மார்களில் மூவர் பெண்கள் - காரைக்கால் அம்மையார், இசைஞானியார், மங்கையர்க்கரசியார்.
- மூலநூல் சுந்தரர் எழுதிய திருத்தொண்ட தொகை, வழி நூல் நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி.
- பெரியபுராணம் பிள்ளை பாதி, புராணம் பாதி எனவும் அழைக்கப்படுகிறது
- தில்லை நடராச பெருமான் உலகெலாம் என அடியெடுத்து கொடுக்க பாடப்பட்டது - பெரியபுராணம்.
- நூல் முற்றுப்பெறும் போதும் உலகெலாம் என முடிகிறது.
- பெரியபுராணத்தின் காப்பிய தலைவன்- சுந்தரர், வில்லன் சிவன்.

- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் ”பக்தி சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ” என சேக்கிழாரை பாராட்டியுள்ளார்.
- உலகம், உயிர், கடவுள் இவை மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் தான் பெரியபுராணம் என திரு.வி.க கூறியுள்ளார்.
- சேக்கிழார் புராணம் பாடியவர் உமாபதி சிவாச்சாரியார்.
- சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடியவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.
- திருஞானசம்பந்தரின் வரலாறு மட்டும் 1256 பாடல்களாகப் பாடபப்பட்டுள்ளது. எனவே பிள்ளை பாதி புராணம் பாதி எனப்படுகிறது.
- சேக்கிழார் தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள குன்றத்துாரில் பிறந்தவர். இவர் அநபாய சோழனிடம் தலைமை அமைச்சராகத் திகழ்ந்தவர். உத்தம சோழ பல்லவராயன் என்று பட்டம் பெற்றவர். மேலும் மாதேவடிகள் என்ற சிறப்புப் பெயரும் இவருக்கு உண்டு.
- மேலும் தெய்வச் சேக்கிழார் என்றும், தொண்டர் சீர் பரவுவார் என்றும் சேக்கிழார் போற்றப்படுகிறார்.
- தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திருவர் சிவனயடியார் ஆவர். அவ்வடியார்களின் வரலாற்றைக் கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் பெரிய புராணம் என்னும் பெயர் பெற்றது.
- இந்நூலுக்கு சேக்கிழார் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். இதனை திருத்தொண்டர் மாக்கதை என்றும் கூறுவர்.
- தில்லை நடராசப் பெருமாள், உலகெலாம் - என்று அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்றதெனவும் கூறுவர். நூல் முற்றுப் பெறும்போது உலகெலாம் என முடிகிறது.
- சேக்கிழாரின் பாடல்கள் அனைத்தும் தெய்வ மணம் கமழும் தன்மையுடையன. எனவே தான், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ - என சேக்கிழாரைப் புகழ்ந்துரைத்துள்ளார்.
- உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான், பெரிபுராணம் என்பார் திரு.வி.கலியானசுந்தரனார்.
- பெரிபுராணமானது தொடர்நிலைச் செய்யுளாய் ஒரு பழஞ்சரிதத்தைச் சொல்வதாய் ஒரு பெரிய உள்ளீடாகிய கற்பனையை எடுத்துக் காட்டுவதாக உள்ள ஒரு பெருங்காப்பியம் - சி.கே.சுப்பிரமணிய முதலியார்.
- பெரியபுராணம் இரண்டு காண்டங்களில், திருமலைச் சருக்கம் முதல் வெள்ளை யானைச் சருக்கம் முடிய 13 சருக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது. 4286 விருத்தப்பாக்கள் கொண்டது.
- 4286 பாக்களில் 1252 பாடல்கள் திருஞான சம்பந்தர் பற்றியே பாடுவதால் பிள்ளை பாதி புராணம் பாதி என்ற வழக்கும் ஏற்பட்டது.
- முதல் காண்டத்தில் 5 சருக்கங்களும், இரண்டாவது காண்டத்தில் 8 சருக்கங்களும் உள்ளன.
- சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை முதல் நூல் (தொகை நூல்). நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி வழிநூல் (வகை நூல்). சேக்கிழார் எழுதிய திருத்தொண்டர் புராணம் சார்பு நூல் (விரிநூல்).

- பன்னிரு திருமுறையில் 12-ஆம் திருமுறையாக பெரியபுராணம் வைக்கப்பட்டுள்ளது. தமிழின் இரண்டாவது தேசியக்காப்பியம் என்று பெரிய புராணத்தைக் கூறுவர். (முதல் தேசியக் காப்பியம் சிலப்பதிகாரம்).
- சேக்கிழார் புராணம் என்ற நூலைப் பாடியவர் உமாபதி சிவாச்சாரியார். சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பாடியவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.
- பெரியபுராணம் - ஓர் ஆய்வு என்ற நூலை இயற்றியவர் அ.ச.ஞானசம்பந்தன்.
- சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றில் தொடங்கி, அவர் பாடியுள்ள 63 நாயன்மார்களின் வரலாற்றினையும் விளக்கி, நடுவிலும் முடிவிலும் சுந்தரமூர்த்தியின் வரலாற்றினையே சொல்லி முடித்து, காப்பியத் தலைவன் (சுந்தரர்) ஒருவன் என்று கூறும்படியாக பெரிய புராணத்தை சேக்கிழார் அமைந்துள்ளார்.
- இந்நூல் மற்ற சமய, மதங்களின் செல்வாக்கைப் பரவ விடாமல் தடுப்பதுடன், சைவ சமய நம்பிக்கையை சிறப்புடன் வளர்க்கும் நூலாகவும், சைவ சமயக் கருத்துக்களைப் பரப்பும் வகையிலும் எடுத்துரைக்கிறது.
- மன்னன் குலோத்துங்க சோழன் சமணத்தின் மீது பற்று கொண்டு, சீவக சிந்தாமணியில் மனம் செலுத்திய நிலையில், சோழனை நல்வழிப்படுத்தப் பாடப்பட்ட நூல் பெரியபுராணம் என்பர்.

**பெரிய புராணம் தரும் செய்திகள்**

- 63 நாயன்மார்களில் பெண்கள் மூவர். குாரைக்கால் அம்மையார், இசைஞானியார் மற்றும் மங்கையர்க்கரசியார் ஆகியோர்.
- தொகையடியார்கள் ஒன்பதின்மர் (9 பேர்). 1) தில்லைவாழ் அந்தணர் 2)பொய் அடிமை இல்லாத புனிதவர் 3) பத்தராய் பணிவார் 4) பரமனையே பாடுவார் 5) சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர் 6) திருவாரூர் பிறந்தார் 7) முப்போதும் திருமேனி தீண்டுவார் 8) முழுநீறு பூசிய முனிவர் 9)அப்பாலும் அடிசேர்ந்தார் ஆகியோர்.
- திருமேனி தீண்டுவார் 8) முழுநீறு பூசிய முனிவர் 9)அப்பாலும் அடிசேர்ந்தார் ஆகியோர்.
- முதுமை வேண்டிப் பெற்று பாடியே கைலாயம் சென்றவர் காரைக்கால் அம்மையார்.
- கூன்பாண்டியனை சைவத்திற்கு மாற்றியவர் மங்கையர்க்கரசியார். மனத்தில் கோயில் கட்டியவர் பூசலார்.
- திருநாவுக்கரசரை வழிபட்டவர் அப்பூதியடிகள். திருஞானசம்பந்தரை வழிபட்டவர் கணநாத நாயனார்.
- நீரால் விளக்கெரித்தவர் கணம்புல்லவர். இரத்தத்தால் விளக்கு ஏற்றியவர் கலியனார். தம் கண்களை சிவனுக்கு அளித்தவர் கண்ணப்பர்.
- விதைத்த நெல்லை எடுத்துச் சமைத்து சிவனடியார்க்கு உணவு படைத்தவர் இளையான்குடி நாயனார்.
- பிள்ளைக்கறி சமைத்துப் படைத்தவர் சிறுதொண்டர். முழங்கையால் சந்தம் அரைத்தவர் மூர்த்தி நாயனார்.

- திருநீறு அணிந்து வந்த பகைவனுடன் போரிடாமல் வெட்டப்பட்டவர் ஏனாதியார்.
- திருநாளைப் போவார் எனப்படுபவர் நந்தனார். மாணியார் எனப்படுபவர் மங்கையர்க்கரசியார்.
- மனைவியைத் தீண்டாது வாழ்ந்தவர் திருநீலகண்ட நாயனார்.

## நாலாயிர திவ்விய பிரபந்தம்

பன்னிரு ஆழ்வார்களும் திருமாலின் அழகில், அருளில் மயங்கி பல பாடல்களைப் பாடினார்கள். ஆழ்வார்களின் காலத்திற்கு பின் வந்த நாதமுனிகள் ஆழ்வார்களின் பாடல்கள் அனைத்தையும் தொகுத்தார். அவை நாலாயிர திவ்விய பிரபந்தம் என அழைக்கப்படுகிறது.

- வைணவ கடவுளைப் போற்றி பாடுவது மங்களா சாசனம் செய்தல் எனப்படும்.
- மங்களா சாசனம் பாடியவர்கள் ஆழ்வார்கள்.
- இறைவனின் திருவடியில் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்கள் எனப்படுவர்.
- ஆழ்வார் பன்னிருவரால் இயற்றப்பட்டது நாலாயிர திவ்விய பிரபந்தம்.
- நாலாயிரதிவ்விய பிரபந்தத்தில் 105 பாசுரங்கள் உள்ளன.
- நூலாயிர திவ்ய பிரபந்தம் 3776 பாடல்களை கொண்டது.
- நாலாயிரதிவ்விய பிரபந்தத்தை தொகுத்தவர்- நாதமுனிகள் ஆவார்.
- ஆழ்வார்களின் அருளிச் செயலுக்குப் பெரிய வாச்சான் பிள்ளை உரை எழுதியுள்ளார்.
- தேனினும் இனி தீந்தமிழ் பனுவல் என்றழைக்கப்படும் நூல் - நாலாயிர திவ்விய பிரபந்தம்.
- ஆழ்வார்கள் 12 பேர் பாடிய பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்வியபிரபந்தம் ஆகும்.
- அருந்தமிழ் பனுவல் என அழைக்கப்படுவது நாலயிர திவ்விய பிரபந்தம்.
- ஆழ்வார் என்ற சொல்லுக்கு ஆழ்ந்தறியும் அறிவை கருவியாக உடையவர் என்று பொருள்.
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் உள்ள மொத்த நூல்கள் 24.
- திருமாலின் ஐம்படைகள் 1) சக்கரம் (சுதர்னம்) 2) வில் (சாரங்கம்) 3) வாள் (நந்தகம்) 4) தண்டு (கௌமோதகி) 5) சங்கு (பாஞ்ச சன்னியம்).
- திருமாலின் வாகனம் கருடன், திருமாலின் தொண்டன் அனுமன்.
- திருமாலைப் பாடாமல் நம்மாழ்வாரையே தெய்வமாகப் பாடியவர் மதுர கவியாழ்வார்.
- பெண்ணாகிய ஆண்டாளையும், திருமாலைப் பாடாத மதுரகவியாழ்வாரையம் நீக்கி ஆழ்வார் மொத்தம் 10 பேர் என்றும் கூறுவர்.
- பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் மூவரும் முதலாழ்வார்கள் எனப்படுவர்.
- சைவ சமயத்தின் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் மூவர் முதலிகள் எனப்படுவர்.

**நூலின் சிறப்புப் பெயர்கள்:**

❖ தீந்தமிழ் பனுவல், திராவிட சாகரம்,

| ஆழ்வார்கள் | நூல்கள் | பாடல்கள் |
|---|---|---|
| 1. பொய்கையாழ்வார் | முதல் திருவந்தாதி | 100 |
| 2. பூதத்தாழ்வார் | இரண்டாம் திருவந்தாதி | 100 |
| 3. பேயாழ்வார் | மூன்றாம் திருவந்தாதி | 100 |
| 4. திருமழிசையாழ்வார் | 1. நான்முகன் திருவந்தாதி<br>2. திருச்சந்த விருத்தம் | 96<br>120 |
| 5. நம்மாழ்வார் | 1. திருவிருத்தம்<br>2. திருவாசிரியம்<br>3. பெரிய திருவந்தாதி<br>4. திருவாய்மொழி (1-10 பத்து) | 100<br>7<br>87<br>1102 |
| 6. மதுரகவியாழ்வார் | கண்ணிநுண் சிறுதாம்பு | 11 |
| 7. பெரியாழ்வார் | 1. திருப்பல்லாண்டு<br>2. திருமொழி | 12<br>461 |
| 8. ஆண்டாள் | 1. திருப்பாவை<br>2. நாச்சியார் திருமொழி | 30<br>143 |
| 9. திருமங்கையாழ்வார் | 1. பெரிய திருமடல்<br>2. சிறிய திருமடல்<br>3. திருக்குறுந்தாண்டகம்<br>4. திருநெடுந்தாண்டகம்<br>5. திருவெழுகூற்றிருக்கை<br>6. பெரிய திருமொழி | 78<br>40<br>20<br>30<br>1<br>1084 |
| 10. தொண்டரடிப் பொடியாழ்வார் | 1. திருப்பள்ளியெழுச்சி<br>2. திருமாலை | 10<br>45 |
| 11. திருப்பாணாழ்வார் | 1. அமலனாதி பிரான் | 10 |
| 12. குலசேகராழ்வார் | 1. பெருமாள் திருமொழி | 105 |

**ஆழ்வார்களின் தொகுப்பு நான்கு பிரிவுகளாக பகுக்கப்பட்டுள்ளன.**

❖ **அ. முதல் ஆயிரம்**

1. பெரியாழ்வார் திருமொழி (திருப்பல்லாண்டு உட்பட)
2. நாச்சியார் திருமொழி
3. பெருமாள் திருமொழி

4. திருச்சந்த விருத்தம்
5. திருப்பள்ளி எழுச்சி
6. அமலனாதிபிரான்
7. கண்ணிநுண் சிறுதாம்பு

❖ **ஆ. பெரிய திருமொழி**

1. திருமங்கை ஆழ்வார் பாடல்கள்

❖ **இ. திருவாய்மொழி**

1. நம்மாழ்வார் பாடல்கள்

❖ **ஈ. இயற்பா**

1. முதல் திருவந்தாதி
2. இரண்டாம் திருவந்தாதி
3. மூன்றாம் திருவந்தாதி
4. நான்முகன் திருவந்தாதி
5. திருவிருத்தம்
6. திருவாசிரியம்
7. பெரிய திருவந்தாதி
8. திருவெழு கூற்றிருக்கை
9. சிறிய திருமடல்
10. பெரிய திருமடல்

## பொய்கையாழ்வார்

| | | |
|---|---|---|
| ஊர் | - | காஞ்சிபுரம் (திருவெஃகா) |
| அம்சம் | - | பாஞ்ச சன்னியம் எனும் சங்கின் அம்சம் |
| மலரின் பிறப்பு | - | தாமரை பொய்கை |
| பாடல்கள் | - | 100 பாடல்கள், முதலாம் திருவந்தாதி |
| சிறப்பு | - | திருமாலின் பத்து அவதாரங்களையும் பாடியவர் |

**மேற்கோள்:**

வையம் தகளியா, வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய
சுடராழி யான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை

## பூதத்தாழ்வார்

| | | |
|---|---|---|
| ஊர் | - | மாமல்லபுரம் |
| அம்சம் | - | கதாயுதத்தின் அம்சம் |

| | | |
|---|---|---|
| மலரின் பிறப்பு | - | குருக்கத்தி மலர் |
| பாடல்கள் | - | 100 பாடல்கள், இரண்டாம் திருவந்தாதி |
| சிறப்புப் பெயர் | - | பெருந் தமிழன் |

**மேற்கோள்:-**

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி

## பேயாழ்வார்

| | | |
|---|---|---|
| ஊர் | - | மயிலாப்பூர் |
| அம்சம் | - | வாளின் அம்சம் |
| மலரின் பிறப்பு | - | செவ்வல்லி மலரின் அம்சம் |
| பாடல்கள் | - | 100 பாடல்கள், மூன்றாம் திருவந்தாதி |
| சிறப்புகள் | - | திருமாலின் கோலத்தைக் கண்டு மகிழ்ந்தவர் |

**மேற்கோள்:-**

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்- செருக்கிளரும்

**சிறப்புகள்:**

- முதலாழ்வார்கள் - பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்
- மூவரும் காலத்தால் முற்பட்டவர்கள். திருமாலால் ஒரே சமயத்தில் ஆட்கொள்ளப்பட்டவர்கள்.
- முதலாழ்வார்கள் மூவரும் சந்தித்த இடம் திருக்கோவிலூர்.
- முதலாழ்வார்கள் மூவரும் ஐப்பசி மாதத்தில் அடுத்தடுத்த நாளில் தோன்றியவர்கள்.
- சூரியனையும், பருப்பொருளையும் விளக்காக ஏற்றியவர் - பொய்கையாழ்வார்
- ஞானத்தையும், நுண்பொருளையும் விளக்காக ஏற்றியவர் - பூதத்தாழ்வார்.

## திருமழிசையாழ்வார்

| | |
|---|---|
| ஊர் | - திருமழிசை (தொண்டை நாடு) |
| அம்சம் | - சக்கரத்தின் அம்சம் |
| பாடல்கள் | - நான்காம் திருவந்தாதி நான்முகன் திருவந்தாதி, திருசந்த விருத்தம் |
| சீடர் | - கணிகண்ணன் |

**சிறப்புகள்:**

- நாராயணனைப் பாடும் வாயால் நரனை பாடேன்
- இறைவனைச் சொன்ன வண்ணம் செய்த பெருமாள்
- பைந்தமிழ் பின்சென்ற பச்சை பசுங் கொண்டலே

**மேற்கோள்:-**

"நான் முகனை நாராயணன் படைத்தார் - நான் முகனும்
தான் முகமாய்ச் சங்கரனைப் படைத்தார்"

## நம்மாழ்வார்

| | |
|---|---|
| ஊர் | - ஆழ்வார் திருநகரி (அ) திருக்குருகூர் |
| அம்சம் | - இறைவன் அம்சம் |
| பெற்றோர் | - காரியர், உடையநங்கை |
| பாடல்கள் | - திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய் மொழி, பெரிய திருவந்தாதி |
| அவதாரம் | - ஆதிசேடனின் அவதாரம் |
| சிறப்புப் பெயர்கள் | - சடகோபர், நம்மாழ்வார், பராங்குசர், மாறன், திருப்புளியாழ்வார் |

**சிறப்புகள்:**

- ❖ நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழி திராவிட வேதம் என அழைக்கப்படுகிறது.
- ❖ சைவத்திற்கு மாணிக்கவாசகனைப் போல் வைணவத்திற்கு நம்மாழ்வார்.
- ❖ நம்மாழ்வாரையே தெய்வமாக வணங்கிப் போற்றியவர் -மதுரகவியாழ்வார்
- ❖ மாறன் அகப்பொருள், மாறன் அலங்காரம் ஆகியவை நம்மாழ்வார் பெயரால் தோன்றிய இலக்கண நூல்கள் ஆகும்.
- ❖ சதுர்வேதத்திற்கு நிகரான நூல்களை இயற்றியதால் வேதம் தமிழ் செய்த மாறன் என அழைக்கப்படுகிறார்.

## மதுரகவியாழ்வார்

| | | |
|---|---|---|
| ஊர் | - | பாண்டிய நாட்டு திருக்கோளூர் |
| பாடல்கள் | - | கண்ணிநுண் சிறுத்தாம்பு |
| அம்சம் | - | கருடாழ்வார் அம்சம் |
| சீடர் | - | நம்மாழ்வாரின் சீடர் |

**சிறப்புகள்:**

- ❖ திருமாலைப் பாடாமல் நம்மாழ்வாரை மட்டுமே பாடியவர்
- ❖ வடதிசையில் அயோத்தி வரை சென்ற ஒரே ஆழ்வார் - **மதுரகவியாழ்வார்**

**மேற்கோள்:-**

"தேவு மற்றறியேன் குருகூர் நம்பிப்
பாவின் இன்னிசைப் பாடித் திரிவனே"

## திருவிளையாடற் புராணம்

| | |
|---|---|
| ஆசிரியர் பெயர் | - பரஞ்சோதி முனிவர் |
| பெற்றோர் | - மீனாட்சி சுந்தர தேசிகர் |
| ஊர் | - திருமறைக்காடு (வேதாரண்யம்- நாகை மாவட்டம்) |
| காலம் | - 16 ஆம் நூற்றாண்டு |
| இயற்றிய நூல்கள் | - திருவிளையாடற் போற்றி கலிவெண்பா, மதுரை பதிற்றுஅந்தாதி, வேதாரண்ய புராணம் (அ) திருமறைக்காட்டு புராணம் (மொழிபெயர்ப்பு நூல்) |
| பாடல்கள் | - 3363 விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட பாடல்கள் |
| படலங்கள் | - 64 படலங்கள் (பெரிய பிரிவு காண்டம், உட்பிரிவு படலம்) |
| மூலநூல் | - கந்த புராணத்தின் ஆலாசிய மான்மியம் என்ற வடமொழி நூலின் தழுவல் ஆகும். |

**திருவிளையாடல் புராணத்தின் முப்பெரும் பிரிவுகள் :-**

| காண்டம் | படலங்கள் |
|---|---|
| 1. மதுரைக் காண்டம் | 18 படலம் |
| 2. கூடற் காண்டம் | 30 படலம் |
| 3. திருவாலவாய்க் காண்டம் | 16 படலம் |

- புராணம் என்றால் வரலாறு என்று பொருள்.
- சிவபெருமான் மதுரையில் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களைப் பற்றிக் கூறும் நூல் திருவிளையாடற் புராணம்.
- திருவிளையாடற் புராணத்திற்கு பண்டிதமணி ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை எழுதியுள்ளார்.
- திருவிளையாடற் புராணத்தை பரஞ்சோதி முனிவா், மதுரை சிவபெருமான் கோயில் எதிரே உள்ள அறுகால் பீடத்தில் அரங்கேற்றினார்.
- இறைவனின் திருவிளையாடல்களைப் பற்றிக் கூறிய முதல் நூல் - கல்லாடம், சுந்தரபாண்டியம்.
- கல்லாடத்தின் ஆசிரியர் கல்லாடர், 11 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவர்.
- முதலில் திருவிளையாடற்புராணம் பாடியவர் பெரும்பற்றப் புலியர் நம்பி.
- அடுத்து பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணம் எழுதினார்.
- தொடை நயமும், பக்திச்சுவையும் மிக்க நூல் திருவிளையாடற் புராணம்.
- பாண்டியர் குலதெய்வமாகிய சொக்கநாதா், கொங்குதேர் வாழ்க்கை எனத் தொடங்கும் பாடலை இறைவனிடம் வேண்டியதன் பொருட்டு தருமிக்கு கொடுத்தார்.
- பாண்டியனிடம் பொன் முடிப்பை பெறச் சென்ற தருமியைத் தடுத்தவர் - நக்கீரன்.
- இறைவனுக்கு செண்பக மாலை சூடி வழிபட எண்ணி சூடாமணி பாண்டியன் செண்பக நந்தவனத்தை ஏற்படுத்தியதால் இவர் செண்பகப் பாண்டியன் என்று அழைக்கப்பட்டார்.
- அளவில்லாத நூல் அறிவு உடையவர்கள் 49 சங்ககால புலவர்கள்.
- உடல் முழுவதும் கண்களை உடையவன் இந்திரன்.

**மேற்கோள்:- (இறைவன் தருமிக்கு அருளிய பாடல்)**

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே" - **குறுந்தொகை**

**இறைவனின் திருவிளையாடல்கள் பற்றிய பிற நூல்கள்:-**

- புலியூர் நம்பி பாடிய திருவிளையாடற் புராணம் திருவாலவாய் உடையார் புராணம் (அ) வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணம் என்று அழைக்கப்படுகிறது.
- கடம்ப புராணத்தை இயற்றியவர் - தொண்டைநாட்டின் இளம்பூர் வீமநாதபண்டிதர்.
- சுந்திரபாண்டியம் எழுதியவர் -தொண்டைநாட்டு வாயிற்பகுதி அனதாரியப்பன்.

## தேம்பாவணி

- தேன்+ பா + அணி - தேம்பாவணி. தேன் போன்ற பாக்களை அணியாக உடையது என்றும், வாடாத மாலை என்றும் பொருள் தரும்.
- தேம்பாவணி இயேசு நாதரின் வளர்ப்புத் தந்தையாகிய வளன் என்ற சூசையப்பரை தலைவராக கொண்டு பாடப்பட்டது.
- தேம்பாவணி கிறித்துவ சமயத்தின் கலைக்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது.
- தேம்பாவணி 3 காண்டம்,36 படலம், 3615 பாடல்களை கொண்டுள்ளது.
- மகவருள் படலம் தேம்பாவணியில் இடம்பெற்றுள்ளது.
- தமிழ் காப்பியங்களைப் பின்பற்றி நாட்டுப்படலமும், நகரப்படலமும் நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ளன.
- திருக்குறளின் அறத்துப்பால் மற்றும் பொருட்பாலை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தவர் - வீரமாமுனிவர்.
- தாவீது மன்னன் அரச மரபில் தோன்றியவன் வளவன் என்ற சூசையப்பர் ஆவார்.
- யூதேய நாட்டில் சவுல் மன்னன் ஆட்சியின் போது பிலித்தையர் என்ற மக்கள் திருமறையை பழித்தும், கடவுளை இகழ்ந்தும் சவுல் மன்னனுக்கு எதிராக படையெடுத்தனர்.
- கோலியாத்து என்ற அரக்கன் இவர்களிடையே தோன்றி ஒருவரை போருக்கு அழைத்தான். யாரும் செல்லவில்லை. பின் தாவீதன் கவணிடைக் கொண்டு அரக்கனை வீழ்த்தி தலையை கொய்தான்.
- தொன்னூல் விளக்கம், குட்டித் தொல்காப்பியம் என்று அழைக்கப்படுகிறது.
- தமிழின் முதல் அகராதி சதுரகராதி. அதன் ஆசிரியர் வீரமாமுனிவர்.
- கத்தோலிக்க சபையின் கொள்கைகளும், அறிவுரைகளும் கதைவடிவில் இடம்பெற்ற நூல் தேம்பாவணி.
- இந்தியாவின் கான்ஸ்டான்டின் என அழைக்கப்பட்டவர் - அசோகர்.

- ❖ தேம்பாவணி மற்றும் திருகாவலூர்க் கலம்பகம் - கதம்ப மாலையாக காட்சி அளிக்கிறது, தொன்னூல் பொன் நூலாக இலங்குகின்றது, சதுரகராதி முத்தாரமாக மிளிர்கின்றது என்று கூறியவர் -ரா.பி. சேதுபிள்ளை.
- ❖ தமிழ் முனிவர்களுள் ஒருவராக வீரமாமுனிவர் விளங்குகின்றார் என சொல்லின் செல்வர் ரா.பி. சேதுபிள்ளை பாராட்டியுள்ளார்.

**மேற்கோள்:-**

- ”நகைசெய் தன்மையி னம்பெழீ இத் தாய்துகள்
  புகைசெய் நெஞ்சமும் பற்றுலு மொன்றுற” **- தேம்பாவணி**

- வெல்வை வேல்செயு மிடலதுன் மிடலடா நானோ
  எல்லையா தரவியற் றெதிரி லாத்திறக் கடவுள் **- தேம்பாவணி**

## சீறாபுராணம் தொடர்பான செய்திகள்

| | |
|---|---|
| ஆசிரியர் | - உமறுப்புலவர் |
| காலம் | - 17 ஆம் நூற்றாண்டு |
| ஊர் | - நாகலாபுரம் (தூத்துக்குடி) |
| பெற்றோர் | - செய்கு முகமது அலியார் |
| இயற்றிய நூல்கள் | - சீறாப்புராணம், முதுமொழிமாலை (80 பாக்கள் கொண்டது), சீதகாதி நொண்டி நாடகம் |
| ஆதரித்தவர் | - அப்துல் காதிர் மரைக்காயர் |

| | | |
|---|---|---|
| விலாதத்துக் காண்டம் 24 படலங்கள் | பிறப்பியற்காண்டம் | பிறப்பும் இளமையும் திருமணமும் |
| நுபுவ்வத்துக் காண்டம் 21 படலங்கள் | செம்பொருட் காண்டம் | திருமறை அருளப்பட்டது மற்றும் மக்கத்து நிகழ்வுகளை கூறுவது |
| ஹிஜ்ரத்துக் காண்டம் 47 படலங்கள் | செலவியற்காண்டம் | மக்கத்தை விட்டு பெருமகனார் மதீனம் செல்லுதல் |

**சிறப்புகள்**

- ❖ உமறுப்புலவர் எட்டயபுரம் கடிகை முத்து புலவரின் மாணவர்.
- ❖ உமறுப்புலவர் இஸ்லாமிய கம்பர் என அழைக்கப்படுகிறார்.
- ❖ உமறுப்புலவர் எட்டயபுரம் அவைக்களப் புலவராக இருந்தவர்.
- ❖ அப்துல் காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதி வேண்டுகோளுக்கு இணங்க உமறுப்புலவர் சீறாப்புராணத்தை இயற்றினார்.

- நூல் முழுமை பெறுவதற்கு முன்பே சீதக்காதி இறந்ததால் அபுல்காசீம் என்ற வள்ளல் உதவியால் இவர் சீறாப்புராணத்தை நிறைவுசெய்தார். அபுல்காசிமை நூலில் பல இடங்களில் நினைவு கூர்ந்துள்ளார்.
- சீறாப்புராணம் 3 காண்டம், 92 படலங்கள், 5027 விருத்தப் பாடல்களை கொண்டது.
- சீறாப்புராணம் என்ற சொல் வாழ்க்கை வரலாற்றை குறிக்கும்.
- சீறாப்புராணம் நபிகள் நாயகத்தின் வரலாற்றை எடுத்துக்கூறும் நூல்.
- சீறத் என்ற அரபுச்சொல் சீறா என்று வழங்கப்பட்டது.
- நபிகள் நாயகமும் இவரின் துணைவர் அபூபக்கர் இருவரும் தெளா என்ற மலைகுகையில் தங்கியிருந்தனர். இக்குகையில் பொந்துகள் அதிகம்.
- அபூபக்கரின் உள்ளங்காலில் பாம்பு பல முறை தீண்டியது.
- சின்னா சீறாவை இயற்றியவர் பனு அகுமது மரைக்காயர் ஆவார். இதில் பெருமகனின் தூயவாழ்வு முழுவதும் பாடி முடிக்கப்பட்டது.
- சின்ன சீறா 39 படலங்களையும், 1829 விருத்தங்களையும், 2145 பாடல்களையும் கொண்ட நூலாகும்.
- கண்ணன் (கர்ணன்) மடியில் தலை வைத்து உறங்கியவர் - பரசுராமன்.
- அகமது என்னும் திருப்பெயரை பெற்றவர் முகமது நபி.

**மேற்கோள்:**

”படுகொலைபுலி மெய்யுறப் பணிந்தவர் பாதத்து
அடிவ ணங்கிய காரண வதிசயம் அதனால்
உடைய வன்திரு தூதரே உண்மையென் றுன்னித்
தினமு டைத்தநெஞ் சாயினர் அறிவினில் தெளிந்தோர்” **- சீறாப்புராணம்**

”இருளகற்றிய கதிரவன் கதிரென விதழிற்
பரிவு பெற்றிடும் அமிர்தநீர் உடலெலாம் பரந்த **- சீறாப்புராணம்**

நிரம்பும் வள்ளுகிர் மடங்கலின் இனங்களில் நிணமுண்
டிரும்ப னைக்கைமும் மதகரிக் கோட்டினை யீழ்த்திட்டு **- சீறாப்புராணம்**